1984 மார்ச் 27]

கோபிச்செட்டிப்பாளையம் சட்டமன்றத் தொகுதியில் வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டும் திட்டம்.

*480—(வினா எண் 22657) திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், கோபி சட்டமன்றத் தொகுதியில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் எத்தனை வீடுகள் கட்டப்பட உள்ளன?

(ஆ) அதன் மதிப்பீடு என்ன ?

(இ) அப் பணி எப்போது துவங்க உள்ளது ?

(ஈ) பெரியார் மாவட்டத்தில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் எத்தனை வீடுகள் கட்டப்பட உள்ளன ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : (அ), (ஆ) மற்றும் (இ) பெரியார் மாவட்டம் கோபி சட்டமன்றத் தொகுதியில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் இல்லை. எனினும் கோபி பகுதி முடிச்சூர் கிராமத்தில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ''ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத் தித்திட்டத்தின்'' கீழ் ரூ. 18.57 இலட்சம் மதிப்பீட்டிலும் 10.08 ஏக்கர் நிலப்பரப்பினை மேம்படுத்த திட்டமிட்டு 3.76 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்பட்டு ரூ. 6.05 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதில் 73 மனைகள் மேம்படுத்தப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படும். மீதமுள்ள நிலப் பரப்பு, இந்து அறநிலையத்துறையிடம் இருந்து கையகப் படுத்தி மனை மேம்பாட்டுத் திட்டத்தில் செயல்படுத்தப்படும்.

(ஈ) பெரியார் மாவட்டம் ஈரோடு நகரில் பெரும்பள்ளம் ஓடைப் பகுதியில் குடிசை மாற்று திட்டத்தின் கீழ் 624 குடியிருப்பு களும் கருங்கல்பாளையத்தில் 288 குடியிருப்புகளும் கட்டப்பட உள்ளன. இது தவிர ''நில ஆர்ஜிதம் மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின்'' கீழ் ஈரோடு கொல்லம்பாளையத்தில் 82 ஏக்கர் நிலப்பரப்பும், நசியனூர் சாலைப்பகுதியில் 188 ஏக்கர் நிலப் பரப்பும், பவானியில் 26.43 ஏக்கர் பரப்பும் மற்றும் தாரா புரத்தில் 336·30 ஏக்கர் நிலப்பரப்பும் ஆர்ஜிதம் செய்யும் திட்டம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரித்தியனால் செயல்படுத் தப்படஉள்ளது.

1984 மார்ச் 27]

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கோபி தாலுக்காவிற்கு உட்பட்டதுதான் முடிச்சூர் கிராமம் என்பது. அங்கே வீடுகள் கட்டும் திட்டம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனுடைய மதிப்பீட்டுத் தொகையைக் கூடச் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டினுடைய மதிப்பீட்டுத் தொகை என்ன? அந்த வேலைகள் எப்போது முடிவு அடையும் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது நிலம் கையகப்படுத்தப்பட்டு, பிறகு அந்த நிலங்கள் மனை மேம்பாடு திட்டத்தின் அடிப்படையில் தரப்படுகிறது. தற்போது 73 மனைகள் தரப்படுகின்ற நிலையிலே இருக்கிறது. அதற்கு முன்னால் நிலம் கையகப் படுத்தப்பட வேண்டிய நிலை இருக்கிறது. அறநிலையத் துறையிடமிருந்து நிலம் கையகப்படுத்தப்பட்டதும், வீடு கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அறநிலையத்துறையிடமிருந்து கையகப்படுத்துவதில் ஏன் காலதாமதம் ஏற்படுகிறது என்று அறியவிரும்புகிறேன்? அத்தோடு பெரியார் மாவட்டத்தில் எந்தெந்த தாலுக்காக்கள் இந்த வீடு கட்டும் திட்டத்தின் மூலமாக எடுக்கப்பட்டிருக்கிறது? இது அந்த கிராமத்திற்கு தேவைதானா? அதாவது தாராபுரத்திற்கு தேவைதானா என்பதையும் பார்க்க வேண்டும். எடுக்கப்படுகிற நிலங்களை முதலிலே அதிகமாக எடுத்துவிடுவதும் பிறகு அது வேண்டாம் என்று விடப்படுவதும் போன்ற நிலைமை இல்லாமல் எத்தனை ஏக்கர்கள் தேவைப்படுகிறதோ, அதை மட்டும் அராய்ந்து அறிந்து எடுப்பதற்கான முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோபிச்செட்டிப்பாளையத்திலிருந்து தாராபுரத்திற்கு போகிறது கேள்வி.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் ஈரோடு நகரில் பெரும்பள்ளம் ஓடைப் பகுதியில் குடிசை மாற்றுத் திட்டத்தின்கீழ் 624 குடியிருப்புகளும் கருங்கல்பாளையத்தில் 288 குடியிருப்புகளும் கட்டப்பட்டுள்ளன. இதுதவிர நில ஆர்ஜித மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஈரோடு கொல்லம்பாளையத்தில் 82 ஏக்கர் நிலப்பரப்பும், நசியனூர் சாலைப் பகுதியில் 188 ஏக்கர் நிலப்பரப்பும், பவானியில் 26.43 ஏக்கர் நிலப்பரப்பும் மற்றும் தாராபுரத்தில் 336.30 ஏக்கர் நிலப்பரப்பும் கையகப்படுத்தப்படுவதற்கான திட்டங்கள்

1984 மார்ச் 27] [மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா]

இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல் தாராபுரத்தைப் பொறுத்தவரையில் 336.30 ஏக்கர் நிலம் தேவைதானா என்ற கேள்வி சட்டமன்றத்திலே எழுப்பப்பட்ட பிறகு அதை பரிசீலனைக்கு எடுத்து அதிகமான நிலங்களை கையகப்படுத்திக்கொண்டு பின்னால் கைவிடுகின்ற நிலைமை இல்லாமல் எந்த அளவுக்கு தேவையோ அந்த அளவுக்கு மட்டும் கையகப்படுத்தியதற்குப் பிறகு வீடுகள் கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, ஈரோடு கருங்கல்பாளையத்திலே 288 வீடுகள் கட்டப்பட இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதேபோல் ஈரோடு நகரத்திலே நெருப்புப் பிடித்து பல குடிசைகள் எரிந்து போனதே அதையும் அந்த வீடுகட்டும் திட்டத்தில் சேர்த்து வீடுகள் கட்டப்படும் என்று அங்கே இருக்கிறவர்கள் குறிப்பிடுகிறார்கள். அந்தத் திட்டம் செயல்பாட்டில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, கருங்கல் பாளையத்தில் 288 வீடுகள் கட்டப்பட உள்ளன. அங்கே புதிய திட்டங்களையும் எடுத்துக்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அந்த முயற்சியும் வெற்றிதரக்கூடிய அளவுக்கு இருக்கிறது. புதிதாக வீடுகள் கட்டவும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சென்னையில் கதர்க் கடைகள் திறக்கும் திட்டம்.

*481—(வினா எண் 20648) திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர்த்தொழில் வாரியம் இளைஞர் சுய வேலை வாய்ப்புத்திட்டத்தின்கீழ் சென்னையில் கதர்க் கடைகளைத் திறந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) அதனால் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளவர்கள் எத்தனைபேர் ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : (அ) இல்லை

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை.